Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 169/2024 PW-5**

Name : ஆறுமுகம்
Father / Husband name : முனுசாமி
Village : அகூர்
Age : 40
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 09.03.2026

A1 present. A2, A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி கிருஷ்ணன் எனது அண்ணன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 1 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் மாலை நான் கழனியில் வேலை செய்துகொண்டிருந்தபோது ரோசணை காவல் நிலைய போலிசார் வந்து கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் எனது அண்ணன் கிருஷ்ணனும் கையொப்பம் செய்தார். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 10.07.2023 ந்தேதி காலை 10.00 மணிக்கு நீங்களும் உங்கள் அண்ணனும் தீவனூர் கிராம எல்லையில் உங்கள் விவசாய நிலத்தின் அருகே

நின்று பேசிக்கொண்டிருந்தபோது ரோசணை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயாார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்க ளும் கிருஷ்ணனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக ளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் யாருடைய கழனியில் வேலை செய்தேன் என்றால் தீவனூரிலுள்ள எனது கழனியில் வேலை செய்தேன். எனது கழனியில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை, கழனி அருகேயுள்ள மெயின்ரோட்டில் கையொப்பம் பெற்றார்கள்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.